# 5

# பரிசுத்த ஆவியானவர் யார்?

"பரிசுத்த ஆவியென்றால் என்ன?" என்பது கேள்வியல்ல, மாறாக, "பரிசுத்த ஆவியானவர் யார்?" என்பதே கேள்வியாகும். இதுவே கேள்வியாக இருக்கின்றது, ஏனென்றால் பரிசுத்த ஆவியானவர் ஒரு நபராக, ஆளுமைப் பண்புள்ள ஒரு தனி நபராக, தேவத்துவத்தில் மூன்றாம் உறுப்பினராக இருக்கின்றார். அவர் ஒரு சக்தி அல்லது வல்லமை என்பதைக் காட்டிலும் மேலானவராக இருக்கின்றார்; இவர் பரலோகத்தின் ஜீவனுள்ள ஒரு நபராக இருக்கின்றார்.

## இவர் ஒரு நபர்

வேதாகமத்தில் இவரைப் பற்றி நமக்குக் கிடைக்கக் கூடிய தகவல்கள் எல்லாம் பரிசுத்த ஆவியானவர் தெய்வீகமானவர் என்ற உண்மையையே சுட்டிக் காட்டுகின்றன. பிதாவுக்கும் குமாரனுக்கும் இருக்கின்ற ஆளுமைப் பண்புகள் எல்லாவற்றையும் பெற்றவராகவே இவரும் காணப்படுகின்றார்.

### இவர் ஒரு நபர் என்பதற்குரிய பண்புகளைப் பெற்றிருக்கின்றார்

பரிசுத்த ஆவியானவரின் பண்புகள், இவர் ஒரு சக்தியாக மட்டும் இருப்பதில்லை மாறாக, உயிருள்ள ஒரு நபராகவும், ஒரு தனி நபராக

வும் இருக்கின்றார் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன:

*1. இவர் கருத்துக்களை மதிப்பிடும் பண்புகள் கொண்டுள்ளார்:* "... பரிசுத்த ஆவிக்கும் ... நலமாகக் கண்டது" (அப். 15:29அ).

*2. இவர் சிந்தையுள்ளவராயிருக்கின்றார்:* "... இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்" (ரோமர் 8:27ஆ).

*3. இவர் சித்தமுள்ளவராய் இருக்கின்றார்:* "இவைகளையெல் லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்" (1 கொரி. 12:11).

*4. இவர் அறிவுள்ளவராய் இருக்கின்றார்:* "... அப்படிப் போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறிய மாட்டான்" (1 கொரி. 2:11ஆ).

*5. இவர் உணர்வுகள் (அன்பு, துக்கம், சந்தோஷம்) உள்ளவராய் இருக்கின்றார்:* "... நீங்களும் என்னோடு கூடப் போராட வேண்டு மென்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிமித்தமும், ஆவியானவருடைய அன்பினிமித்தமும், உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்" (ரோமர் 15:32ஆ); "அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்" (எபே. 4:30); "நீங்கள் மிகுந்த உபத்திரவத்திலே, பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே, திரு வசனத்தை ஏற்றுக் கொண்டு, எங்களையும் கர்த்தரையும் பின்பற்று கிறவர்களாகி" (1 தெச. 1:6).

பரிசுத்த ஆவியானவர் இந்தப் பண்புகளைப் பெற்றிருக்கின்றார் என்ற உண்மையானது, இவர் ஒரு நபராக இருக்கின்றார் என்பதை வெளிப்படுத்துகின்றது.

## இவர் ஒரு நபருக்குரிய செயல்பாடுகளை நிறைவேற்றுகின்றார்

பரிசுத்த ஆவியானவர் வெறுமனே ஒரு சக்தியாக மட்டுமல்லாது, ஒரு நபராகவும் செயல்படுகின்றார்.

இவரால் பின்வரும் செயல்களைச் செய்ய முடியும்:

*1. இவரால் போதித்து நினைப்பூட்ட முடியும்:* "என் நாமத் தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றர வாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான்

*உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப் பூட்டுவார்" (யோவா. 14:26).*

*2. இவரால் சாட்சி கொடுக்க முடியும்:* "பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக் குறித்துச் சாட்சி கொடுப்பார்" (யோவா. 15:26).

*3. இவர் சத்தியத்திற்குள் வழி நடத்துகின்றார்:* "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்" (யோவா. 16:13இ).

*4. இவர் பேசுகின்றார்:* "அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல்" (யோவா. 16:13ஆ; அப். 8:29; 11:12; 1 தீமோ. 4:1 ஆகியவற்றையும் காணவும்).

*5. இவர் கேட்கின்றார்:* "தாம் கேள்விப்பட்ட யாவையுஞ் சொல்லி," (யோவா. 16:13இ).

*6. இவர் அறிவிக்கின்றார்:* "வரப் போகிற காரியங்களை உங் களுக்கு அறிவிப்பார்" (யோவா. 16:13ஈ).

*7. இவர் தடை பண்ணுகின்றார்:* "அவர்கள் பிரிகியா கலாத்தியா நாடுகளைக் கடந்து போனபோது, ஆசியாவிலே வசனத்தைச் சொல்லா தபடிக்குப் பரிசுத்த ஆவியினாலே தடை பண்ணப்பட்டு" (அப். 16:6).

*8. இவர் உயிர்ப்பிக்கின்றார்:* "கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்" (ரோமர் 8:11ஆ).

*9. இவர் வெளிப்படுத்துகின்றார்:* "நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்" (1 கொரி. 2:10அ; எபே. 3:3-6ஐயும் காணவும்).

*10. இவர் ஆராய்ந்தறிகின்றார்:* "அந்த ஆவியானவர் எல்லா வற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்" (1 கொரி. 2:10ஆ).

*11. இவர் வாக்குத்தத்தம் பண்ணுகின்றார்:* "ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும் படியாகவும், ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று" (கலா. 3:14; அப். 2:33ஐக் காணவும்).

*12. இவர் ஐக்கியமாகின்றார்:* "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினு

டைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங் கூட இருப்பதாக" (2 கொரி. 13:14; பிலி. 2:1ஐயும் காணவும்).

*13. இவர் வேண்டுதல் செய்கின்றார்:* "... ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்; ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்த வான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால் ..." (ரோமர் 8:26, 27).

*14. இவர் குறித்துக் காட்டுகின்றார் மற்றும் முன்னறிவிக் கின்றார்:* "தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளை யும் முன்னறிவித்தபோது இன்ன காலத்தைக் குறித்தாரென்பதை யும்..." (1 பேது. 1:11).

*15. இவர் அழைக்கின்றார்:* "ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்" (வெளி. 22:17அ).

*16. இவர் நடத்துகின்றார்:* "இயேசு பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவராய் யோர்தானை விட்டுத் திரும்பி, ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டு" (லூக். 4:1); "மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்" (ரோமர் 8:14).

மேற் சொல்லப்பட்ட ஒவ்வொரு செயலையும் ஒரு நபரால் செய்ய முடியும், ஆனால் ஒரு சக்தியால் இவற்றைச் செய்ய முடியாது. இவ்விதமாக, பரிசுத்த ஆவியானவர் ஒரு நபராகவே காணப்பட வேண்டும்.

## இவர் தவறாக நடத்தப்படக் கூடும்

பரிசுத்த ஆவியானவரைப் பற்றிக் கூறப்படும் மரியாதைக் குறைவான வார்த்தைகள் அல்லது புண்படுத்தும் வார்த்தைகள் எல்லாம், ஒரு நபரைத் தவறாக நடத்துதலாகவே சொல்லப்படுகின் றன, அவை உயிரற்ற ஒரு வல்லமை அல்லது சக்திக்கு விரோதமான வையாகச் சொல்லப்படுவதில்லை. பின்வரும் வழிகளில் இவர் தவறாக நடத்தப்படக் கூடும்:

*1. இவரைத் தூஷணப்படுத்தக் கூடும்:* "... ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை ... எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது

*இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை" (மத். 12:31, 32).*

*2. இவரிடத்தில் பொய் சொல்லக் கூடும்:* பேதுரு அவனை நோக்கி: *"அனனியாவே, ... பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?" (அப். 5:3அ).*

*3. இவரை எதிர்த்து நிற்கக் கூடும்: "வணங்காக் கழுத்துள்ள வர்களே, இருதயத்திலும் செவிகளிலும் விருத்தசேதனம் பெறாதவர் களே, உங்கள் பிதாக்களைப் போல நீங்களும் பரிசுத்த ஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்து நிற்கிறீர்கள்" (அப். 7:51).*

*4. இவரைத் துக்கப்படுத்தக் கூடும்: "அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்" (எபே. 4:30).*

*5. இவரை அவமானப்படுத்தவோ அல்லது நிந்திக்கவோ கூடும்: "... கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் ..." (எபி. 10:29).*

*6. இவரை அவித்துப் போடக் கூடும்: "ஆவியை அவித்துப் போடாதிருங்கள்" (1 தெச. 5:19).*

*பரிசுத்த ஆவியானவர் எப்படியெல்லாம் தவறாக நடத்தப்படக் கூடும் என்பதற்கான கூற்றுக்கள் இவர் ஒரு நபர் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன. ஒரு வல்லமை அல்லது சக்தியைத் தவறாக நடத்துதல் என்ற செயலானது கவிதை நடை அல்லது உருவக நடை தவிர வழக்கமான முறையில், மேற்கண்ட வகையில் விளக்கப்படுத்துவ தில்லை.மேற்சொன்ன வசனங்களுக்கான சந்தர்ப்பங்கள் உருவக நடை யில் மொழி வழங்கப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன.*

## இவர் தனிப்பட்டவராய் இருக்கின்றார்

*பிதாவோடும் குமாரனோடும் அவர்களது இயல்பு மற்றும் பண்புகளைப் பெற்றவராகப் பரிசுத்த ஆவியானவர் குறிப்பிட்டுக் காட்டப்படுவதுடன் இவர் தமக்கே உரிய தனிச் சிறப்பான, தனித் தன்மையுள்ள இருப்பைப் பெற்றிருக்கிறார் என்பது இன்னொரு சுட்டிக் காட்டுதலாயிருக்கின்றது.*

*இயேசு ஞானஸ்நானம் பெறும்போது அவர் மேல் இவர் இறங்கி வந்ததாகக் குறிப்பிடப்படுகின்றார் (யோவா. 1:33). குமாரனானவர் தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றுக் கரையேறுகையில், ஆவியானவர் அவர் மீது இறங்கினார், மற்றும் பிதாவானவர் பரலோகத்திலிருந்து பேசினார் (மத். 3:16, 17; லூக். 3:21, 22). பிதாவானவர் பரலோகத்தில்*

இருந்தார், குமாரனானவர் பூமியில் இருந்தார், ஆவியானவர் இயேசுவுடன் தங்கியிருக்கும்படி வந்தார்.

இயேசுவுக்கு எதிராகப் பேசும்போது ஒருவருக்கு அது மன்னிக்கப்பட முடியும்-ஆனால் பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாகப் பேசும் ஒருவர் மன்னிக்கப்படவே முடியாது (மத். 12:32). இயேசுவும் பரிசுத்த ஆவியானவரும் ஒரே நபராக இருந்தால், எப்படி ஒருவர் இயேசுவுக்கு எதிராகப் பேசினாலும் பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாகப் பேசாமல் இருக்க முடியும்? இந்த போதனையைக் கொடுப்பதில் இயேசு தங்களுடைய தனித்தன்மையை உணர்ந்திருக்க வேண்டும்.

லூக்கா 4:1ல் இயேசு பரிசுத்த ஆவியினால் நிறையப்பட்டார் என்று கூறப்படுகின்றது, மற்றவர்களும் இதே போல பரிசுத்த ஆவியினால் நிறையப்பட்டனர் என்றும் கூறப்படுகின்றது (அப். 6:3, 5; 7:55; 11:24). நடபடிகளில் பரிசுத்த ஆவியினால் நிறையப்பட்ட இவர்கள் யாவரும் பரிசுத்த ஆவியானவர் என்ற அதே நபராக இருக்கவில்லை என்று நிச்சயமாக நாம் அனைவரும் ஒப்புக் கொள்வோம். இயேசு மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஆகியோரும் கூட தனித் தனியானவர்கள் என்பது அடையாளம் கண்டு கொள்ளப்பட வேண்டும்.

இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை (யோவா. 7:39ஆ) என்று யோவான் எழுதினார். இது இயேசு இந்த பூமியில் ஏற்கனவே அப்போஸ்தலர்களுடன் இருக்கும்போது கூறப்பட்டதாகும். பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை என்றால், அவர் இயேசுவைத் தவிர, இன்னொருவராய்த்தான் இருக்க வேண்டும்.

யோவா. 14:26ல் இயேசு தமது அப்போஸ்தலர்களுக்கு "இன்னொரு தேற்றரவாளனை" அனுப்பப்போவதாக சொன்னார். (யோவா. 14:16ன்படி) இவரே பரிசுத்த ஆவியானவர் ஆவார். இயேசுவே அந்தத் தேற்றரவாளனாக இருந்தால் அவர் எப்படி "இன்னொரு" தேற்றரவாளனை அனுப்பியிருக்க முடியும்? அதே போல இயேசுவும் இந்தத் தேற்றரவாளனும் ஒருவரே என்றால் அவர் எப்படி "இன்னொரு" தேற்றரவாளனாக இருக்க முடியும்?

இயேசு தாம் போகின்ற வரையில், ஆவியானவரை அனுப்பப் போகிறதில்லை என்று கூறினார் (யோவா. 16:7). மேலும் இயேசு, பரிசுத்த ஆவியானவர் சுயமாய் ஒன்றும் பேச மாட்டார் என்றும், இயேசுவினிடத்தில் கேள்விப்பட்டதையே அவர் பேசுவார் என்றும்

*கூறினார் (யோவா. 16:13). இயேசு மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஆகியோரைப் பற்றிப் புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள், அவர்கள் இருவரும் இரண்டு தனித் தனி நபர்களாக, பரலோகத்தில் இருக்கின்றவர்கள் என்று சுட்டிக் காட்டுகின்றது.*

## இவர் தெய்வீகமானவர்

*பிதாவோடும் குமாரனோடும் சமமானவராயிருப்பதாகவும், ஒரே நிலையைக் கொண்டிருப்பதாகவும் பரிசுத்த ஆவியானவர் குறிப்பிடப்படுகின்றார். மக்கள், பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற வேண்டியிருக்கின்றது (மத். 28:19). இந்த மூன்று பேரும் ஒரே அந்தஸ்து உள்ளவர்களாய் இருக்கின்றார்கள் என்று பவுலும், 2 கொரி. 13:14ல் குறிப்பிட்டார்: "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் உங்கள் அனைவரோடுங் கூட இருப்பதாக." ஆவியானவர், தேவன் ("பிதா"; 1 கொரி. 8:6), மற்றும் கர்த்தர் ("இயேசு"; 1 கொரி. 8:6) ஆகியோர் ஆவிக்குரிய வரங்களை நடப்பிக்கிறதில் ஒன்றாகவே இருக்கின்றார்கள் (1 கொரி. 12:4-6). இவைகளை ஆவியானவரே நடப்பித்து, தமது சித்தத்தின்படி பகிர்ந்து கொடுக்கிறார் என்று கூறப்படுகின்றது (1 கொரி. 12:11).[1]*

*பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகியோர் தனித் தனியானவர்கள், ஒரே இயல்பு கொண்டு, பரலோகத்தில் இருக்கின்ற தனித் தனி நபர்கள் என்பதைப் புதிய ஏற்பாட்டின் ஆதாரமானது தெளிவாகவும் வல்லமையாகவும் காண்பிக்கின்றது. அவர்கள் ஒருவருக்கொருவர் கொண்டுள்ள உறவிலும், மனித குலத்திற்கான தங்கள் ஊழியத்திலும் ஒன்றாக இணைந்துள்ளனர்.*

*தேவனுக்கு மட்டுமே உரிய பண்புகள் பரிசுத்த ஆவியானவருக்கும் இருப்பதாகக் காட்டப்படுகின்றன. இவர் பிதாவோடும் குமாரனோடும் பகிர்ந்து கொள்ளுகின்ற ஐந்து பண்புகளைக் கவனியுங்கள்:*

*1. <u>இவர் நித்தியமானவராய் இருக்கின்றார்:</u> நித்திய இயல்பைப் பற்றிக் கூறக்கூடிய வேதவசனங்கள், பின்வருமாறு: (1) பரிசுத்த ஆவியானவர் - "நித்திய ஆவியினாலே தம்மைத் தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு உங்கள் மனச் சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!"*

*(எபி. 9:14); (2) பிதாவானவர் - ''உமது சிங்காசனம் பூர்வ முதல் உறுதியானது; நீர் அநாதியாயிருக்கிறீர்'' (சங். 93:2); மற்றும் (3)* இயேசுவானவர் - *"இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்'' (எபி. 13:8); "இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்" (2* பேது. *1:11).*

*2. இவர் எல்லாம் அறிந்தவராய் இருக்கின்றார்:* வேதாகமத்தின் பத்திகளில் இந்த அறிவைப் பற்றிப் பேசப்படுகின்றது: *(1)* பரிசுத்த ஆவியானவர் - *"நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார்'' (1 கொரி. 2:10); (2)* பிதாவானவர் - *"அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது" (எபி. 4:13);* மற்றும் *(3)* இயேசுவானவர் - *''அப்படியிருந்தும், இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால், அவர்களை நம்பி இணங்கவில்லை. மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால், மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்க வேண்டியதாயிருக்கவில்லை" (யோவா. 2:24, 25).*

*3. இவர் எல்லா வல்லமையும் நிறைந்திருக்கிறார்:* அநேக வேத வசனப்பகுதிகளில், ஒவ்வொன்றின் மேலும் இம்மூவருக்கும் உள்ள வல்லமை குறிப்பிடப்படுகின்றது: *(1)* பரிசுத்த ஆவியானவர்-*"பரிசுத்த ஆவி உன் மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன் மேல் நிழலிடும்'' (லூக். 1:35அ); ''பின்பு இயேசு ஆவியானவருடைய பலத்தினாலே கலிலேயாவுக்குத் திரும்பிப் போனார்" (லூக். 4:14அ); "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து" (அப். 1:8அ); (2)* தேவன்-*"தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை" (லூக். 1:37);* மற்றும் *(3)* இயேசு - *"... வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" (மத். 28:18).*

*4. இவர் எங்கும் நிறைந்திருக்கிறார்:* எங்கும் நிறைந்திருக்கும் வல்லமை இம்மூவருக்கும் இருக்கின்றது: *(1)* பரிசுத்த ஆவியானவர் - *"உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்?" (சங். 139:7அ); (2)* பிதாவானவர் - *''தேவன் மெய்யாக பூமியிலே வாசம் பண்ணுவாரோ? இதோ வானங்களும் வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே" (1 இரா. 8:27அ); "யாவனாகிலும் தன்னை*

*நான் காணாதபடிக்கு மறைவிடங்களில் ஒளித்துக் கொள்ளக் கூடுமோ என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் வானத்தையும் பூமியையும் நிரப்புகிறவர் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே. 23:24); மற்றும் (3) இயேசு-"உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" (மத். 28:20ஆ).*

*5. இவர் படைக்கும் வல்லமை உடையவராயிருக்கிறார்:* வேதாகமத்தின் பத்திகள் தேவத்துவத்தின் ஒவ்வொரு உறுப்பினரையும் படைப்பவராகச் சித்தரிக்கின்றன: *(1) பரிசுத்த ஆவியானவர் - "தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்" (ஆதி. 1:2); (2) பிதாவானவர் - "அவர் பூமியைத் தமது வல்லமையினால் உண்டாக்கி, பூச்சக்கரத்தைத் தமது ஞானத்தினால் படைத்து, வானத்தைத் தமது பேரறிவினால் விரித்தார்" (எரே. 51:15); மற்றும் (3) குமாரனானவர் - "ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப் படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது" (கொலோ. 1:16).*

## முடிவுரை

*பரிசுத்த ஆவியானவர், தேவனுக்கு மட்டுமே பயன்படுத்தக் கூடிய சொற்றொடர்களில் விவரிக்கப்படுகின்றார். இந்தச் சொற்றொடர்களிலிருந்து பரிசுத்த ஆவியானவர், பிதாவோடும் குமாரனோடும் தெய்வீக இயல்பைப் பகிர்ந்து கொண்டு, பிதாவோடும் குமாரனோடும் ஒன்றாக இருப்பதை நாம் முடிவு செய்ய இயலும், ஆனாலும் இவர் ஒரு தனிப்பட்ட ஆளுமைத் தன்மை உடையவராய் இருக்கின்றார். வேதாகமத்தின் முக்கியமான மையமான நபராக இவர் விளங்குகின்றார்.*

## பாட வினாக்கள்

*(விடைகள் 308 ம் பக்கங்களில்)*

1. *"பரிசுத்த ஆவியென்றால் என்ன?" என்பதல்ல மாறாக "பரிசுத்த ஆவியானவர் யார்?" என்பதே கேள்வியாக இருக்க வேண்டியது ஏன் என்பதை விளக்கவும்.*
2. *பரிசுத்த ஆவியானவர் வாழுகின்ற ஒரு "நபராக" இருக்கின்றார் என்பதைச் சுட்டிக்காட்டும் ஐந்து பண்புடைமைகள் யாவை?*
3. *பரிசுத்த ஆவியானவர் தவறாக நடத்தப்படக் கூடும் என்ற உண்மையான அவரை ஒரு நபர் என்று சுட்டிக் காட்டுவது எப்படி?*
4. *பிதாவோடும் குமாரனோடும் பரிசுத்த ஆவியானவர் பகிர்ந்து கொள்ளும் பண்புகள் யாவை?*

## வார்த்தை உதவிகள்

***பண்புடைமைகள்*** *- தன்மைகள் அல்லது குணநலன்கள். ரோமர் 1:20, "எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை" என்று கூறுகின்றது.*

***அற்புத வரங்கள்*** *- தேவனால் கொடுக்கப்பட்ட விசேஷ வல்லமைகள்-பாஷைகளில் பேசுதல், குணப்படுத்துதல் மற்றும் தீர்க்கதரிசனம் சொல்லுதல் முதலியன-புதிய ஏற்பாடு எழுதி முடிக்கப் படுவதற்கு முன்னர் இவைகள் ஆதி சபையாருக்குக் கொடுக்கப் பட்டன. இந்த வரங்கள் இப்போது தேவையில்லை அல்லது இருப்பதில்லை (எபே. 4:5; மத். 28:18-20ஐக் காணவும்).*

## இன்றைய கிறிஸ்தவர்களிடத்தில் பரிசுத்த ஆவியானவரின் கிரியை

1. *இவர் பாவம் மற்றும் மரணத்தின் பிரமாணத்திலிருந்து நம்மை விடுவிக்கின்றார் (ரோமர் 8:2-8).*
2. *இவர் நமது உயிர்த்தெழுதலைக் கொண்டுவருவார் (ரோமர் 8:11).*
3. *இவர் நமது ஜெபங்களில் உதவி செய்கிறார் (ரோமர் 8:26; எபே. 6:18).*
4. *இவர் நமக்காக வேண்டுதல் செய்கின்றார் (ரோமர் 8:26, 27).*

5. இவர் நம்மை நடத்துகின்றார் (ரோமர் 8:14).
6. இவர் மீட்கப்படும் நாளுக்கென்று நம்மை முத்தரிக்கின்றார் (2 கொரி. 1:22; எபே. 1:13, 14; 4:30).
7. இவர் நம்மோடு ஐக்கியமாய் இருக்கின்றார் (2 கொரி. 13:14).
8. இவர் நாம் பிதாவினிடத்தில் சேருவதற்கு வழியாய் இருக்கின்றார் (எபே. 2:18).
9. இவர் உள்ளான மனுஷனைப் பலப்படுத்துகின்றார் (எபே. 3:16).
10. இவர் ஒருமையைக் கொண்டு வருகின்றார் (எபே. 4:3).
11. இவர் நம்மை பரிசுத்தமாக்குகின்றார் (2 தெச. 2:13).

[1]அற்புத வரங்கள் ஒழிந்து போய் விட்டன. 1 கொரி. 13:8-13ல் கூறப்பட்டுள்ளவைகளைக் கொண்டு நாம் இதைத் தைரியமாய்க் கூற முடியும். 1 கொரிந்தியர் நிருபத்தில் அற்புத வரங்களைப் பற்றிய பவுலின் விவாதத்தை நாம் மூன்று அதிகாரங்களில் பார்க்கின்றோம் (12-14). இந்த விவாதத்தின் நடுவில் அவர், எந்த அற்புத வரத்தைக் காட்டிலும் அன்பு அதிகமான முக்கியத்துவம் வாய்ந்தது என்று அறிவித்தார் (13:1-13), மாபெரும் வரமாகிய அன்பானது, ஆவிக்குரிய வரங்களை ஒழியச் செய்யும் என்கின்றார். பவுல், "தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், [அற்புத] அறிவானாலும் ஒழிந்துபோம்" என்று சொன்னார். இந்த வரங்களைப் பற்றிப் பவுல், "நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்" (1 கொரி. 13:9, 10) என்று கூறினார். "நிறைவானது வரும்போது" இந்த அற்புத வரங்கள் ஒழிய வேண்டியவைகளாய் இருந்தன.

"நிறைவானது" என்ற வார்த்தை "முழுமையானது" என்ற அர்த்தம் தருவதால், இது "குறைவானதற்கு" முரண்பட்டதாக இருக்கின்றது. தேவனுடைய வசனத்தை வாய் மொழியாக வெளிப்படுத்திய அற்புத அறிவு, தீர்க்கதரிசனம் ஆகியவை "குறைவானவை" யாகும். புதிய ஏற்பாட்டில் எழுதிப் பதிவு செய்யப்பட்டவைகளே முழுமையான அல்லது "நிறைவான" வெளிப்பாடாக மனிதருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை உணருவது இயல்பானதாய் இருக்கின்றது. தேவனுடைய சித்தத்தின் இந்த முழுமையான வெளிப்பாடே "பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசமாய்" (யூதா 3) இருக்கின்றது, இது முதல் நூற்றாண்டின் இறுதியில் பொதுவான உடைமையாக்கப்பட்டது. "நிறைவானது" வந்தபோது,

*"குறைவானது" ஒழிந்து போயிற்று. புதிய ஏற்பாடானது தேவனுடைய சித்தத்தை முழுவதும் பதிவு செய்து வைத்துள்ளபடியால் (2 தீமோ. 3:16, 17; 2 பேது. 1:3), மற்ற வெளிப்படுத்துதல்களுக்கென்று அற்புத வரங்கள் தொடர்ந்து தேவைப்படுவதில்லை. (பில் சான்டர்ஸ், "இன்றைய நாட்களில் யாரேனும் அற்புத வரங்கள் பெற்றிருக்கிறார்களா?"* இன்றைக்கான சத்தியம் *[ஏப்ரல், 1995]: 49.)*